ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2039/24 - 2017 ඔක්තෝබර් මස 04 වැනි බදාදා - 2016.10.04
*2039/24 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*மத்திய மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, திண்ம கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபையைத் தாபிப்பது தொடர்பான நியதிச் சட்ட நகல் வரைவு*

*மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், நீதி, சமாதானம், உள்ளூராட்சி மற்றும் மனிதவலு கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிப, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், முதலீட்டு ஒருங்கமைப்பு என்ற விடயங்களுக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளர் பீ. பி. விஜயரத்ன ஆகிய நான், இங்கு பிரசுரிக்கப்பட்ட மத்திய மாகாண சபையின் திண்ம கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபையைத் தாபிப்பது தொடர்பான நியதிச்சட்ட வரைவு நகல் இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்கள் கழிந்ததன் பின்னர் மத்திய மாகாண சபையில் முன்வைக்கப்படும் என்பதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன். எவருக்காவது இந்நியதிச் சட்டத்தில் உள்ளடங்கியுள்ள ஏற்பாடுகள் பற்றி முன்வைப்பதற்கு ஏதாவது விடயங்கள் அல்லது திருத்தங்கள் இருப்பின் அவ்விடயங்கள் பற்றி அல்லது திருத்தங்கள் பற்றி இக்காலப் பகுதிக்குள் என்னிடம் சமர்ப்பிக்க முடியும்.*

*பீ. பி. விஜயரத்ன,*
*முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், நீதி,*
*சமாதானம், உள்ளூராட்சி அலுவல்கள் மற்றும்,*
*மனிதவலு, கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை,*
*காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிப உணவு வழங்கல்*
*மற்றும் விநியோகம், முதலீட்டு ஒருங்கமைப்பு அமைச்சின் செயலாளர்,*
*மத்திய மாகாணம்.*

*முதலமைச்சு அலுவலகம்,*
*மத்திய மாகாண சபை,*
*பள்ளேகலை,*
*2017, செத்தெம்பர் 22.*

PG 3713— 09 (2017/10)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**மத்திய மாகாண மாகாண சபை**

மத்திய மாகாணத்தின் முதலமைச்சு மற்றும் நிதி மற்றும் திட்டமிடல், நீதி, சமாதானம், உள்நாட்டு அலுவல்கள் மற்றும் மாகாண நிர்வாகம், மனிதவலு, கல்வி, கலாசார நடவடிக்கைகள், சுற்றுலாத்துறை, காணி, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தக, வாணிப, உணவு வழங்கல் மற்றும் விநியோகம், முதலீட்டு ஒருங்கமைப்பு அமைச்சு.

**மத்திய மாகாணம்**

*2017 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, மத்திய மாகாண மாகாண சபையின் கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபை நியதிச் சட்டம்*

*மத்திய மாகாணத்துக்குள் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன் மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்கள் மூலம் சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்களைச் சேகரித்தல், வேறுபடுத்தி வைத்தல், கொண்டு செல்லுதல், மாற்றுதல், தயாரித்தல் மற்றும் பயன்படுத்துதலை முறைப்படுத்திக் கண்காணித்து மேற்பார்வை செய்வதற்கென மத்திய மாகாணத்தின் கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபையைத் தாபிப்பதற்கும், மாகாணத்தின் கழிவுப் பொருட்களது முகாமைக்கெனவும் அனைத்து உள்ளூராட்சி அமையங்களையும் தொடர்புபடச் செய்வதற்கும் மற்றும் இவற்றுடன் இணைந்த அம்சங்கள் தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் உரிய நியதிச் சட்டமாகும்.*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணத்தின் மாகாண சபை இவ்வாறு விதிக்கின்றது**

*சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.*

1. இந்த நியதிச் சட்டம் மத்திய மாகாணத்தின் 2017 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க, கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபை நியதிச் சட்டம் என அறிமுகப்படுத்தப்படுவதுடன், அது ஆளுநரால் கையொப்பமிடும் (இதன் பின்னர் இங்கு "குறித்த திகதி" எனக் குறிப்பிடப்படும்) தினத்திலிருந்து செயற்பாட்டுக்கு வரும்.

பகுதி - I

**மத்திய மாகாணத்தின் கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபையைக் கூட்டிணைத்தல்**

2. (I) இங்கு இதன் பின்னர் "அதிகார சபை" எனக் குறிப்பிடப்படும் மத்திய மாகாணத்தின் கழிவுப் பொருட்கள் முகாமை அதிகார சபையொன்று இத்தால் தாபிக்கப்படுகின்றது ;

(II) அதிகார சபை (I) ஆவது உப பிரிவின்படி அதற்கென ஒதுக்கப்பட்ட பெயரில் கூட்டிணைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கென இடையறாத நிலைப்பும் பொது இலட்சினையும் இருத்தல் வேண்டும். அதிகார சபையின் பெயரால் அதன் மூலம் அதற்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியும்.

*அதிகார சபையின் உறுப்பினர்கள்.*

3. (1) அதிகார சபை பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :

(I) உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் ஆறு உறுப்பினர்களான,

(அ) மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிச் செயலாளர் ;

(ஆ) மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவர் ;

(இ) மத்திய மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் ;

(ஈ) மத்திய மாகாணத்தின் பிரதிச் செயலாளர் (நிதி) ;

(உ) மத்திய மாகாணத்தின் சுற்றாடல் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அலுவலர் ஒருவர் ;

(ஊ) மத்திய மாகாண சபையின் சட்ட அலுவலர் மற்றும்,

(II) அமைச்சரால் நியமனம் செய்யப்படும்,

(அ) கழிவுப் பொருட்கள் முகாமை பற்றிய விசேட அறிவும் அனுபவமும் கொண்டோரிடையே இருவர், மற்றும் ;

(ஆ) மத்திய மாகாணத்தின் அனைத்து மாநகர சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் ஒரு மாநகர சபைத் தலைவரும், அனைத்து நகர சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் ஒரு நகர சபைத் தலைவரும், அனைத்து பிரதேச சபைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணம் ஒரு பிரதேச சபைத் தலைவரும் கொண்டமைந்து இருப்பர்.

(III) அதிகார சபையின் உறுப்பினர்கள் அமைச்சரது கையொப்பத்துடன் வெளியிடப்படும் கடிதத்தின் மூலம் முறையாக நியமிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறான அனைத்து நியமனங்களும் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும் ;

(IV) மேற்குறித்த (ii) உப பிரிவின் கீழ் நியமிக்கப்படும் உறுப்பினர்கள் கழிவுப் பொருட்கள் முகாமை விடயங்களுடன் தொடர்புள்ள ஏதேனுமோர் நிறுவனத்தின் பங்குதாரராக, பணிப்பாளர் சபை உறுப்பினராக அல்லது ஆலோசகராக இருத்தல் கூடாது.

(2) அமைச்சரால் நியமிக்கப்படும் மேற்காட்டிய உறுப்பினர்களிடையே ஒரு உறுப்பினர் அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்படுதல் வேண்டும். அதிகார சபையின் தலைவர்.

(3) தலைவரது பதவிக்காலம், அவர் அதிகார சபையில் உறுப்பினராகச் செயற்படும் கால எல்லை வரையிலும், அமைச்சரது மெச்சுதல் இருக்கும் வரையிலும் இருத்தல் வேண்டும்.

(4) (I) நோய்க்கு உட்படுதல், இலங்கையை விட்டும் வெளியேறி இருத்தல், அல்லது வேறேதும் இயலாமை காரணமாகத் தலைவர் தமது பதவியில் கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற முடியாமற் போகும் சந்தர்ப்பத்தில் அமைச்சரால் தலைவராகப் பதிற்கடமை மேற்கொள்வதற்கென இருக்கும் உறுப்பினர்களிடையே ஒருவரை நியமித்துக்கொள்ள முடியும் ; தலைவரது பதவிக்காலம் நிறைவு.

(II) தலைவரது பதவி பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது ஒரு சில காரணங்களாலோ முடிவுக்கு வருதல் வேண்டும்.

(அ) 4 ஆவது பிரிவுக்கமைய அதிகார சபையின் உறுப்புரிமைக்குப் பொருத்தமற்றவராக ஆகுதல்

(ஆ) தமது கையொப்பத்துடன் அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்படும் பதவி விலகற் கடிதம் மூலம் பதவி விலகுதல் ;

(இ) உரிய காரணங்களைக் குறிப்பிட்டு அமைச்சரால் பதவி நீக்கம் செய்யப்படுதல் ;

(ஈ) இறந்து போகுதல் .

4. எவரேனும் ஒருவர்,

(1) பாராளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் அல்லது உள்ளூராட்சி அமையமொன்றின் உறுப்பினரெனின்,

(2) இலங்கைப் பிரசையாக இல்லாதிருப்பின்,

(3) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவக் குழுவினால் சித்த சுவாதீனமற்றவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருப்பின், அல்லது முழுமையான செயலிழப்புக்கு உட்பட்டிருப்பின்,

(4) இலங்கை அல்லது வேறேதும் நாடொன்றில் செயற்பாட்டிலுள்ள ஏதும் சட்டங்களின் கீழ் குற்றச் செயலுக்கு உட்பட்ட ஒருவர் என வெளிப்படுத்தப்பட்டுக் குறிப்பிட்ட குற்றச் செயலிலிருந்து விடுவிக்கப்படாத ஒருவராக இருப்பின்,

(5) இலங்கையில் அல்லது வேறேதும் நாடொன்றில் ஏதேனும் ஒரு நீதிமன்றத்தின் மூலம் குற்றத்துக்கான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவராகப் பெயரிடப்பட்டிருப்பின், அல்லது அவ்வாறான தண்டனையை அனுபவிப்பவராக இருப்பின்,

(6) இலஞ்சம் தொடர்பான குற்றத்துக்கெனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஒருவராகவோ அல்லது குற்றவாளியாக இருப்பின்,

அவர் அதிகார சபையின் உறுப்பினராக நியமிக்கப்படுவதற்கோ அல்லது உறுப்பினராகத் தொடர்ந்து செயற்படவோ பொருத்தமற்றவராவார்.

*அதிகார சபையின் கூட்டங்களுக்கு வருகை தருவதற்கான சிரமக் கொடுப்பனவு*

5. அதிகார சபையின் அமர்வு மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நாளுக்குமென ஒவ்வொரு கூட்ட அமர்விலும் கலந்து கொள்ளும் ஒவ்வொரு உறுப்பினர்களுக்கும் அமைச்சரால் காலத்துக்குக்காலம் தீர்மானிக்கப்படும் கொடுப்பனவு வழங்கப்பட முடியும்.

*அதிகார சபையின் பதவி முத்திரை.*

6. (1) அதிகார சபையின் பதவி முத்திரை தலைவரது பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் பதவி முத்திரை அதிகாரசபை தீர்மானிக்கும் வகையில் மாற்றத்துக்கு உள்ளாக முடியும்.

(3) அதிகாரசபையின் உறுப்பினர்கள் இருவரது முன்னிலையில் அல்லாது எந்தவொரு அடைவுப் பத்திரத்திலோ அல்லது ஆவணத்திலோ அதிகாரசபையின் பதவி முத்திரை இடப்படுதல் கூடாது என்பதுடன், தமது பிரசன்னத்தை உறுதிப்படுத்துவதற்கென இருவரும் அடைவுப் பத்திரத்தில் அல்லது ஆவணத்தில் தமது கையொப்பத்தை இடுதல் வேண்டும்.

*அதிகார சபையின் கூட்டங்கள்.*

7. (1) அதிகாரசபையின் ஒவ்வொரு கூட்ட அமர்வுக்கும் தலைவர் தலைமை தாங்குதல் வேண்டும். ஏதேனும் கூட்டமொன்றுக்குத் தலைவர் வருகை தராதவிடத்து, வருகை தந்துள்ள உறுப்பினர்களிடையே பெரும்பான்மை இணக்கத்துடன் எவரேனும் ஒருவர் குறித்த கூட்டத்துக்கு மாத்திரம் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும்.

(2) அதிகாரசபையின் ஏதேனுமொரு கூட்டத்தின் கோரம் ஏழு பேராக இருத்தல் வேண்டும்.

(3) அதிகார சபையினால் பரிசீலனைக்கென முன்வைக்கப்படும் ஒவ்வொரு விடயமும் அதிகார சபையின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் குறித்த விடயத்தைக் கூட்டத்துக்குச் சமுகமளித்திருந்த உறுப்பினர்களது பெரும்பான்மையினர் அங்கீகரித்தல் வேண்டும்.

(4) அவ்வாறான கூட்டமொன்றில் கலந்தாலோசிப்பதற்கென ஏதேனும் ஒரு விடயம் தொடர்பில் வாக்கெடுப்பு நிலை சமமாகக் காணப்பட்டிருந்தால் தலைவர் தமது முதலாவது வாக்கிற்கு மேலதிகமாகத் தீர்மானிக்கும் வாக்கை முன்வைத்தல் வேண்டும்.

(5) அதிகாரசபையின் கூட்டமொன்றில் ஒரு உறுப்பினரைத்தெரிவு செய்து நியமிக்கும் தருணத்தில் அல்லது நியமித்துக் கொள்ளும் போது ஏதேனும் தவறு நடந்துவிட்டது என்றோ அல்லது ஒரு உறுப்பினர் தகுதியற்றவர் எனப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டாலோ குறித்த நபருக்குத் தகுதிகள் உள்ளன எனக் கருதி அதுவரை நடாத்தப்பட்ட கூட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் செயல்களும் செல்லுபடியானவையாக இருத்தல் வேண்டும்.

(6) அதிகாரசபையின் உறுப்பினர்களது வெற்றிடம் நிலவுவதன் காரணமாகக் கூட்டமொன்றில் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு தீர்மானமும் எந்தவிதச் செயற்பாடும் வலுவற்றதாக ஆக்கப்படுதல் கூடாது.

*8*. அதிகாரசபை உத்தியோகபூர்வ மட்டத்தில் நியமனம் பெறும் ஒவ்வொரு உறுப்பினரும் தாம் அதிகாரசபைக்கு ஏதேனும் பதவிக்கு ஏற்ற நிலையில் நியமிக்கப்பட்டாரெனின், தாம் அந்தப் பதவியில் நிலைக்கும் வரையில் உத்தியோகபூர்வ மட்டத்தில் நியமனம் பெற்ற அதிகாரசபையின் உறுப்பினராகப் பதவி வகித்தல் வேண்டும். உத்தியோகபூர்வ நியமன உறுப் பினர்களது பத விக்காலம்.

## *பகுதி - II*

*அதிகாரசபையின் நோக்கங்கள், அதிகாரங்கள் மற்றும் கருமங்கள்*

*9*. அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமையும். அதிகார சபையின் நோக்கங்கள்.

(1) மத்திய மாகாணத்தின் சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன் மாகாணத்தின் நகர்ப் புறம் மற்றும் கிராமப் புறச் சுற்றாடலில் சேரும் கழிவுப் பொருட்களை உச்ச அளவில் குறைத்து, மாகாண மக்களதும் விலங்குகளதும் நன்மை கருதிச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்வது.

(2) கழிவுப் பொருட்கள் மூலம் ஏற்படக்கூடிய சேதங்களைக் குறைத்துக் கொள்வதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பது, மத்திய மாகாண சபையின் நிர்வாக எல்லைக்குள் உற்பத்தியாகும் கழிவுப் பொருட்களைச் சுற்றாடலுக்கும் சுகநலத்துக்கும் பாதிப்புகள் ஏற்படாத வண்ணம் அகற்றுவது, களஞ்சியப்படுத்துவது போன்ற கருமங்களை முறைப்படுத்துவதற்கான திட்டங்களை மேற்கொள்வது, ஆலோசனை வழங்குவது, ஏற்பாடு செய்வது, மேற்பார்வை செய்வது, உள்ளூராட்சி அமையங்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புள்ள ஏனைய அமையங்களுடன் தொடர்புகள் பேணுவது மற்றும் கழிவுப் பொருட்கள் மூலம் ஏற்படக்கூடிய சேதங்களை உறுதிப்படுத்துவது, கணிப்பீடு செய்வது.

(3) கழிவுப் பொருட்களை மீளப் பயன்படுத்துவது மற்றும் மீள்சுழற்சி செய்வது தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வது.

(4) கழிவுப் பொருட்களை முறையற்ற விதத்தில் அகற்றுவதனால் மாசடைவுக்கு உள்ளாகும் இடங்கள், பிரதேசங்கள் மற்றும் வலயங்களைப் பழைய நிலைக்குக் கொண்டுவருதற்கான திட்டங்களை இயற்றுவது மற்றும் திட்டங்களைச் செயற்படுத்துவது.

*10*. அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு அமையும். அதிகார சபையின் அதிகாரங்களும் கருமங்களும்.

(1) மாகாணத்துக்குள் கழிவுப்பொருட்கள் முகாமை தொடர்பில் மாகாணத்தின் உள்ளூராட்சி அமையங்களுடன் தொடர்புகளை வைத்திருத்தல் மற்றும் அதனுடன் தொடர்பான நிகழ்ச்சிகளை செயற்படுத்துவது.

(2) சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்குடன் கழிவுப் பொருட்களின் மீள்சுழற்சிக்கான திட்டங்களைச் செயற்படுத்துவது.

(3) கழிவுப் பொருட்களின் தோற்றம், உள்ளடக்கத்தைத் தீர்மானிப்பது, வகைப்படுத்துவது, சேகரிப்பது, கொண்டு செல்வது, தயாரிப்பது, அகற்றுவது, கழிவுப் பொருட்களின் தோற்றத்தைக் குறை நிலைக்குக் கொண்டுவருவது தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வது, தரவுகளைச் சேகரிப்பது மற்றும் அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வது.

(4) அதிகார சபையின் மூலம் வழங்கப்படும் சேவைகளுக்கெனக் கட்டணங்களை அறவிட்டுக்கொள்வது.

(5) உள்ளூராட்சி அமையங்கள் மூலம் கழிவுப் பொருட்கள் முகாமை செய்யப்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான நடைமுறைகளை விதிப்பது, அவற்றைச் செயற்படுத்துவது மற்றும் மேற்பார்வை செய்வது.

(6) அதிகார சபையின் அதிகாரங்களையும் கருமங்களையும் சரியாக நிறைவேற்றுவதும், செயற்படுத்துவதற்குத் தேவையான ஒப்பந்தங்களை மேற்கொள்வதும்.

(7) எவையேனும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களைக் கையேற்பது, வைத்திருப்பது, குத்தகைக்கோ அல்லது வாடகைக்கோ விடுவது, அடகு வைப்பது, ஈடுபிடிப்பது, விற்பது அல்லது எவ்வகையிலேனும் அகற்றுவது.

(8) நடைமுறையில் செயலில் உள்ள சட்டதிட்டங்களுக்கு இயைபாக அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணியாட் குழுவைத் தீர்மானிப்பது, ஆட்சேர்ப்பு வழிமுறைகளையும் ஒழுக்காற்று வழிமுறைகளையும் தயாரிப்பது.

(9) கழிவுப் பொருட்கள் முகாமையுடன் தொடர்புள்ள நடைமுறையிலுள்ள சட்டவிதிகளுக்கமைய வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களையும் வெளிநாட்டு உதவிகளையும் பெற்றுக்கொள்வது.

(10) கழிவுப் பொருள் முகாமையுடன் தொடர்புள்ள சட்டங்கள் மற்றும் சட்டவிதிகளை மீறுவது பற்றிய பொது மக்கள், உள்ளூராட்சி அமையங்கள் அல்லது வேறெந்த அமையத்தின் மூலம் செய்யப்படும் முறைப்பாடுகளை விசாரிப்பது மற்றும் அவை பற்றிய பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வது.

(11) கழிவுப் பொருட்கள் முகாமை தொடர்பில் பொது மக்கள் மற்றும் உள்ளூராட்சி அமையங்களை அறிவூட்டம் செய்வது.

(12) நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு உட்பட்ட வகையில் சுற்றாடலைப்பாதுகாப்பது.

(13) அதிகார சபையின் நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்தற்கென நடைமுறையிலுள்ள சட்டதிட்டங்கள், சட்டவிதிகளுக்கு அமைவாகத் தேவைப்படும் பணியாட் குழுவையும் அதன் உள்ளடக்கங்களையும் தீர்மானிப்பது.

## பகுதி III

அதிகார சபையின் பணியாட் குழுவினர்

பணியாட் குழுவினர்.

11. அதிகார சபையின் கருமங்களை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான பணியாட் குழுவைத் தீர்மானிப்பது மற்றும் குறித்த பணியாட் குழுவினர் தொடர்பில் நடைமுறையிலுள்ள சட்டங்கள், சட்டவாதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கமைய மேற்குறித்த கருமங்களை நிறைவேற்ற அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு.

பொது முகாமையாளர்.

12. (1) அதிகார சபையின் அங்கீகாரத்துடன், விடயப்பொறுப்பு அமைச்சரது இணக்கத்துடன், அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கமைய தகைமைகளைக் கொண்டுள்ள ஒருவர் பொது முகாமையாளராக நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

(2) அதிகார சபையின் பிரதம நிருவாக அலுவலர் பொது முகாமையாளர் ஆவார். ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கமைய வழங்கப்படும் கடமைக் கூறுகளை நிறைவேற்றும் பொறுப்பு பொது முகாமையாளரிடம் சாட்டப்படுகின்றது.

(3) அதிகார சபையின் முன்னேற்றங்கருதிக் காலத்துக்குக்காலம் தேவையெனக் கருதப்படும் ஏனைய அதிகாரங்களையும், கருமங்களையும் தலைவரால் பொது முகாமையாளருக்குச் சாட்டுதல் செய்யப்பட முடியும்.

13. மேற்குறித்த II ஆவது பிரிவின்கீழ் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய,

(1) மத்திய மாகாணத்தின் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் அனைத்து நியமனங்கள், பதவி உயர்வுகள், பணியாட் குழுவினரது கல்வி மற்றும் ஏனைய தொழில்சார் தகைமைகள் மற்றும் வேதனங்கள், சம்பள அளவுகள் உள்ளிட்ட ஆட்சேர்ப்பு விதிமுறைகளைத் தயாரிப்பது மற்றும் அவற்றை அங்கீகரிப்புக்கென உரிய அமையங்களிடம் முன்வைப்பது.

(2) ஒழுக்காறு, தண்டனை மற்றும் சேவையை முடித்துவிடுதல் மற்றும் இல்லாமல் செய்தல் உள்ளிட்ட ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பொதுவான நடத்தை, விடுமுறை போன்ற ஆளணிக் கட்டுப்பாட்டுடன் தொடர்பான நியமங்களை விதிப்பது.

(3) பணியாட் குழுவினரது தகவுத் திறனை விருத்தி செய்வதற்குத் தேவையான பணியாட்குழு அபிவிருத்தி முறைகளை ஏற்படுத்துவது.

(4) பணியாட் குழுவினருக்கான நம்பிக்கைப் பொறுப்புநிதிய முறையைச் செயற்படுத்துவது, திரட்டிய நிதியைக் கொடுப்பது மற்றும் அதிகார சபை தீர்மானிக்கும் வகையில் விசேட கொடுப்பனவு முறையைச் செயற்படுத்துவது.

(5) அதிகார சபையின் பணியாட் குழுவினரது நலன்புரி முறைகளைச் செயற்படுத்துவது என்பவற்றை மேற்கொள்வதற்கென அதிகார சபைக்கு அதிகாரமுண்டு.

14. (1) மேற்காட்டிய II ஆவது பிரிவின்கீழ் விதிக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பணியாட்களை ஆட்சேர்ப்புச் செய்ய அதிகார சபைக்கு அதிகாரமுண்டு.

15. (1) அதிகார சபையின் ஏற்பாடுகளுக்கமைய அதிகார சபையின் நோக்கங்கள், இலக்குகள் என்பவற்றை அடைந்து கொள்வதற்கென அலுவலர்களை ஈடுபடுத்துவது, வழிநடத்துவது, மேற்பார்வை, கட்டுப்பாடு செய்வது மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வது. பொது முகாமை யாளரது அதிகாரங்கள்.

(2) எதிர்காலக் கழிவுப்பொருள் முகாமையுடன் தொடர்புள்ள புதிய துறைகளை இனங்காணுதல் மற்றும் இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை மிகவும் பயனுள்ள வகையில் அடைந்து கொள்வதற்கென உதவும் அபிவிருத்தி மற்றும் புதிய ஆக்கங்கள் கொண்ட துறைகளை இனங்காண்பதும் தேசியக் கொள்கைக்கு அமைய முன்மொழிவுகளை முன்வைப்பதும், இவற்றுக்கெனப் பொருத்தமான சட்டங்களை வகுப்பதும் அவற்றைச் செயற்படுத்துவதும்.

(3) அதிகார சபையின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கென உரிய தரப்பினருடன் ஒப்பந்தங்களை மேற்கொள்வது, அதிகார சபையுடன் தொடர்புள்ள ஒப்பந்தங்களைப் பேணுவது மற்றும் கட்டுப்படுத்துவது உள்ளிட்ட வகையில் சொத்துக்களைப் பாதுகாப்பது.

16. பொது முகாமையாளரது அதிகாரங்கள் கருமங்களிடையே அவர் தேவை எனக் கருதும் எவற்றையேனும் பொருத்தமான உயர் அலுவலர்களுக்கு எழுத்துமூலம் சாட்டுதல் செய்வது. பொது முகாமையாளர் அதிகாரங்களைச் சாட்டுதல் செய்தல்.

## பகுதி IV

### நிதி

17. (1) அதிகார சபைக்கென கணக்கொன்று இருத்தல் வேண்டும். சபையின் கணக்குகள்.

(2) கீழே காட்டப்பட்டுள்ள நிதி, அதிகார சபையின் கணக்கில் வரவிலிடப்படுதல் வேண்டும். அதிகார சபையின் கணக்கிற்கு நிதி கிடைத்தல்.

(i) அதிகார சபை மூலம் அதன் அதிகாரங்களைச் செயற்படுத்துதல், அதிகாரங்கள், கடமைகள் என்பவற்றை நிறைவேற்றுதல் மூலம் பெறப்படும் அல்லது அறவிடப்படும் அனைத்து நிதியும்.

(ii) மாகாண சபை அல்லது நடுவண் அரசு மூலம் ஒதுக்கப்படும் அனைத்து நிதியும்.

(iii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உதவி நிதி, நன்கொடை மற்றும் கடனாக அதிகார சபை பெற்றுக்கொள்ளும் நிதியும்.

(iv) மாகாணத்தில் அதிகார சபையின் நடவடிக்கைகளைச் செயற்படுத்தும்போது கட்டணங்களாக அதிகார சபைக்குக் கிடைக்கும் நிதி மற்றும் கட்டணங்கள் என அறவிடப்படும் அனைத்து நிதியும்.

(v) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அதிகார சபை மூலம் தொடுக்கப்படும் சட்டக் கருமங்களின்மீது அறவிடப்படும் தண்டப்பணம் மற்றும் வழக்குக் கட்டணங்கள்.

(vi) கணக்கைப் பேணி வருவரும், செயற்படுத்துவதும், இந்த நியதிச் சட்டத்தில் மாகாண ஏற்பாடுகளுக்கமைய 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க சபைச் சட்டத்தின் குறித்த ஏற்பாடுகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

பெறுகைகள், செலுத்துகைகள் பற்றிய பொதுவான பரிசோதனைகள்.

18. அதிகார சபையின் கணக்கிற்குள் வரும் நிதி மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய பொதுவான மேற்பார்வை மற்றும் நிருவாகம் பற்றிய பொறுப்புகள் பொது முகாமையாளருக்குச் சாட்டுதல் செய்யப்படும்.

அதிகார சபை நிதியைப் பயன்படுத்துதல்.

19. அதிகார சபையின் கணக்கிலிருந்து பின்வரும் வகையில் செலவிடப்பட முடியும்.

(1) அதிகார சபையின் உறுப்பினர்களது கொடுப்பனவுகள்.

(2) இந்த நியதிச் சட்டத்தின்கீழ் அதிகார சபைக்குரிய அனைத்து அதிகாரங்கள், கருமங்கள் மற்றும் பொறுப்புகளை நிறைவேற்றும் வகையில் செலவாகும் அனைத்துத் தொகையும்.

(3) அதிகார சபையின் அலுவலர்கள், பணியாட்களது சம்பளக் கொடுப்பனவுகள், ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் அவ்வாறான ஏனைய செலவினங்கள்.

(4) அதிகார சபையின் நடவடிக்கைகளையும் கருமங்களையும் முகாமை செய்வதற்குத் தேவையான அனைத்துத் தொகையும்.

அதிகார சபை கடன் பெறுதல்.

20. (1) அதிகார சபையின் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்கென மாகாண அமைச்சரவையின் முன் அனுமதியின் மீது கடன்கள் பெறுவதற்கென அதிகார சபைக்கு அதிகாரம் உண்டு. அத்துடன் கடன் தொகை, அவற்றை மீளச் செலுத்தும் கால எல்லை, கடன் கட்டுப்பாடு எனும் நிபந்தனைகள் மற்றும் கடன் பெற உத் தேசித்துள்ள அமையங்கள் என்பவை மாகாண அமைச்சரவை தீர்மானிக்கும் வகையில் அமைதல் வேண்டும்.

(2) இந்த நியதிச் சட்டத்தின்கீழ் தனது பொறுப்புக்களை மேற்கொள்வதற்கெனத் தேவைப்படும் குறுங்கால நிதித் தேவைகளை அதிகார சபை, அமைச்சரின் விருப்பத்துக்கமைய அல்லது அவரால் வழங்கப்படும் பொதுவான அனுமதி நியமங்களுக்கமைய மேலதிகப் பற்றின் மூலமாகவோ அல்லது வேறு வழியிலோ தற்காலிகக் கடன்களைப் பெற முடியும்.

எனினும், இந்தப் பிரிவின்கீழ் அதிகார சபை பெற்றுக்கொள்ளும் தற்காலிகக் கடன் தொகைக்கெனக் கொடுப்பனவு செய்ய வேண்டியுள்ள எஞ்சிய தொகை எத்தருணத்திலும் நிதிக்குப் பொறுப்பான அமைச்சர் தீர்மானிக்கும் தொகையைத் தாண்டாது இருத்தல் வேண்டும்.

அதிகார சபையின் நிதியாண்டு.

21. அதிகார சபையின் நிதியாண்டு பஞ்சாங்க வருடமாக அமைதல் வேண்டும்.

அதிகார சபையின் கணக்காய்வுகள்.

22. (1) அதிகார சபையின் வருமானங்கள் மற்றும் செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அனைத்து நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரசாங்க கணக்காய்வுத் திணைக்களம் காலத்துக்குக் காலம் கணக்காய்வு செய்ய முடியும். மத்திய மாகாணத்தின் கணக்காய்வுப் பணிப்பாளரும் தேவையேற்படும்போது கணக்காய்வை மேற்கொள்ள முடியும்.

(2) ஒவ்வொரு ஆண்டுக்குமென கணக்கின் சொத்துக்கள், பொறுப்புக்கள் அந்த நிதியாண்டு முடிந்த மூன்று மாதங்களுக்குள் கணக்காய்வுக்கென கணக்காய்வாளரிடம் முன்வைத்தல் வேண்டும். கணக்காய்வின்போது அவருக்கு உதவுவதற்கெனத் தகுதிபெற்ற கணக்காய்வாளர் அல்லது கணக்காய்வாளர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். அவர்கள் அவரது ஆலோசனைப்படி கட்டுப்பாட்டுக்குள் செயற்படுதல் வேண்டும்.

(3) கணக்காய்வுக் கருமங்களுக்கெனக் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கெனத் தலைவர்/முகாமையாளர் தீர்மானிக்கும் அல்லது கணக்காய்வுப் பிரிவு வேண்டிக்கொள்ளும் தொகையை அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்துதல் வேண்டும். அதிகார சபையின் மூலம் கணக்காய்வாளருக்கு வழங்கப்பட்ட தொகையிலிருந்து சேவையில் ஈடுபட்ட தகுதிவாய்ந்த கணக்காய்வாளருக்குக் கொடுக்கப்பட்ட தொகையைக் கழித்தபின்னர் இலங்கையின் திரட்டிய நிதியத்தில் வைப்பிலிடப்படும்.

(4) கணக்காய்வாளருக்கும் மற்றும் கணக்காய்வைச் செய்யும்போது அவருக்கு உதவும் ஆட்களுக்கும் கணக்காய்வுக் கருமங்களுக்குத் தேவைப்படும் எனக் கருதும் அனைத்து ஏடுகளையும், உறுதிகளையும், ஒப்பந்தங்களையும், வவுச்சர்களையும் கணக்குகளுடன் தொடர்புள்ள ஏனைய ஆவணங்களைப் பரிசீலிக்கும் அனுமதி இருத்தல் வேண்டும். அத்துடன், இந்தக் கருமங்களின் போது தமது அறிவுக்கு எட்டிய வரையில் வழங்கப்படவேண்டிய தகவல்களை அதிகார சபையோ அதன் அலுவலர்களோ இவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

(5) இந்தப் பந்தியில் கருமங்களுக்கெனத் தகுதிபெற்ற கணக்காய்வாளர் என்பது,

(i) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டுள்ள ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினரான, குறித்த நிறுவகத்தின் நிருவாகச் சபையினால் கணக்காளர் ஒருவராகப் பணியாற்றவென வழங்கப்பட்டுள்ள சான்றிதழைக் கொண்டுள்ள ஆட்கள்,

(ii) ஒவ்வொரு பங்குதாரருக்கும் கணக்காளராகச் செயற்படவெனக் குறித்த நிறுவகத்தின் கவுன்சில் மூலம் வழங்கப்பட்டுள்ள சான்றிதமுடன்,

(iii) இலங்கையின் பட்டயக் கணக்காளர் நிறுவகம் அல்லது சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டதுமான நிறுவகமொன்றின் உறுப்புரிமை பெற்றுள்ள கணக்காளர் பங்காளர்களாகவுள்ள கணக்காளர் நிறுவகம் எனக் கருதப்படும்.

23. (1) கணக்காய்வாளர் அதிகார சபையின் கணக்குகளைப் பரிசீலித்து,

(i) அவருக்கும் தேவையான அனைத்துத் தகவல்களும் விளக்கங்களும் கிடைத்துள்ளன அல்லது கிடைக்கப்பெறவில்லை என்பதைக் குறிப்பிட்டு,

(ii) அதிகார சபையின் நடவடிக்கைகளை உண்மையானவையாகவும், நியாயமானவையாகவும் காட்டுவதற்கென முன்வைக்கப்பட்ட கணக்கு அறிக்கைகள் நன்கு தயாரிக்கப்பட்டுள்ளனவா எனக் குறிப்பிட்டு,

(iii) அவரது எண்ணப்படி மாகாண சகைபயின் மூலம் அதிகார சபையின் கணக்குகள் பற்றி ஏதேனும் பரிசீலனையைச் செய்ய அக்கறை காட்டுதல் வேண்டுமெனக் கருதும் அம்சங்கள் இருப்பின் அவை பற்றிக் கவனம் செலுத்தி அறிக்கையை முன்வைக்க முடியும்.

(iv) கணக்காய்வாளர் தமது அறிக்கையை ஆய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் தலைவருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கணக்கு அறிக்கைகளும் ஆண்டறிக்கைகளும்

24. ஒவ்வொரு வருடத்துக்குமெனக் கணக்கில் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வாளர் அறிக்கை தமக்குக் கிடைத்தவுடன், குறித்த அறிக்கையையும் சொத்துக்கள், பொறுப்புக்கள் பற்றிக் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் அதிகார சபையின் வருடாந்த செயற்பாடுகள் பற்றிய வெளியீட்டையும் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரிடம் தலைவர் கையளித்தல் வேண்டும். அவற்றின் பிரதிகளை, உரிய கணக்குகளை நிதியாண்டு முடிந்த 03 மாதங்களுக்குள் அவர் மாகாண சபையில் முன்வைக்க ஏற்பாடுகள் செய்தல் வேண்டும்.

## பகுதி V

பொதுவான ஏற்பாடுகள்

*சட்டவாக்க அதிகாரம்.*

*25.* (1) இந்த நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவது மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான கட்டளைகளை அமைச்சர் ஆக்க இயலும்.

*நியதிச் சட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் செயல்களது பாதுகாப்பு.*

(2) 1 ஆவது உப பிரிவின்கீழ் வழங்கப்படும் அதிகாரங்களில் பொதுத் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பின்வரும் அனைத்து மற்றும் ஒவ்வொரு கருத்துக்கெனவும் கட்டளைகளை ஆக்க முடியும்.

(3) 1 ஆவது உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு எவரேனும் ஒருவர் இந்த நியதிச் சட்டத்தின்கீழ் அல்லது அதிகார சபையின் நியமத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயற்பாடு தொடர்பில் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்யப்பட சிவில் அல்லது குற்றவியல் வழக்கில், குறித்த செயற்பாடு நல்லெண்ணத்தில் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால், அவரால் மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அதிகார சபையின் நிதியிலிருந்து கொடுப்பனவு செய்ய முடியும்.

*26.* (1) அதிகார சபைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட ஏதும் சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றில் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட ஏதும் செலவினங்களை அதிகார சபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட முடியும். அவ்வாறான சிவில் அல்லது குற்றவியல் வழக்கிலிருந்து அதிகார சபை அறவிட்டுக்கொண்ட ஏதும் செலவினங்கள் அல்லது நட்டஈடுகள் அதிகார சபையின் கணக்கில் வரவிலிடப்படுதல் வேண்டும். குறித்த குற்றங்கள் தொடர்பில் அலுவலர் தனிப்பட்ட ரீதியில் பொறுப்பேற்பின், உரிய தொகையை அதிகார சபையின் கணக்கிலிருந்து செலுத்துவது தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் அதிகார சபையைச் சார்ந்தது.

*அதிகார சபையின் உறுப்பினர்கள், சேவையாளர்கள் அரச ஊழியராவர் என்பது.*

*27.* (1) அதிகார சபையின் எவரேனும் உறுப்பினர் அல்லது அதிகார சபையில் சேவையில் ஈடுபட்டுள்ள ஒருவர் குற்றவியல் சட்டக்கோவையின் பொருள்கோடலுக்கமைய அரச அலுவலர்களாகக் கருதப்படல் வேண்டும்.

(2) இலஞ்ச ஊழல் சட்டத்தின் பொருள்கோடலுக்கமைய அதிகார சபை அட்டவணையில் பட்டியலிடப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

## பகுதி V

பொருள்கோடல்

*பொருள்கோடல்.*

*28.* பதங்கள் தொடர்பில் கொருள் கோடல் தேவைப்பட்டாலன்றி, இந்த நியதிச் சட்டத்தில் :-

"மாகாணம்" என்பது மத்திய மாகாணத்தையும் ;

"மாகாண சபை" என்பது மத்திய மாகாண சபையையும் ;

"ஆளுநர்" என்பது மத்திய மாகாணத்தின் ஆளுநரையும் ;

"அமைச்சர்" என்பது மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரையும் ;

"அமைச்சு" என்பது மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சினையும் ;

"அமைச்சின் செயலாளர்" என்பது, மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புச் செயலாளரையும் ;

"உள்ளூராட்சி அமையங்கள்" என்பது மத்திய மாகாணத்துக்குள் அமைந்துள்ள மாநகர சபைகள், நகர சபைகள் அல்லது பிரதேச சபைகள் என்பவற்றையும் ;

''நபர்''என்பது, பொதுக் கூட்டுத்தாபனம், நிறுவகம், அரசுடன் இணைந்த நிறுவகம் என்பதையும் ;

''மாசடைதல்'' என்பது, ஏதேனும் நன்மை பயக்கும் பயன்பாட்டை மோசமாகப் பாதிக்கும் வகையில் அல்லது பொதுச் சுகாதாரத்துக்கோ, பாதுகாப்புக்கோ, நலன் பேணலுக்கோ அல்லது விலங்குகளுக்கு, பறவைகளுக்கு, வன சீவராசிகளுக்கு, நீர்வாழ் உயிரினங்களுக்கு அல்லது எல்லா வகையினாய தாவரங்களுக்கும் தீங்கு விளைவிக்கின்ற அல்லது தீங்கு விளைவிக்கும் சாத்தியமுள்ள ஒரு நிலையை ஏற்படுத்தும் வகையில் கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம், வெளியேற்றுவதன் மூலம் அல்லது படியவைப்பதன் மூலம் சுற்றாடலின் ஏதேனும் ஒரு பகுதியின் பௌதிக, வெப்ப, இரசாயன, உயிரியல் கதிர்வீச்சுப் பண்புகளில் ஏற்படும் நேரடியான மாற்றம் அல்லது நேரடியற்ற மாற்றம் எதுவும் என்பதையும் ;

''கழிவுப்பொருள்'' என்பது, மனிதனின் நிலைப்புக்கு மற்றும் சுகாதாரத்துக்கும் தொல்லை, அச்சுறுத்தல் மற்றும் சிக்கல் ஏற்படுத்தக்கூடிய அல்லது காலப்போக்கில் அவ்வாறு ஏற்படக்கூடியதாகவுள்ள கழிவுப்பொருட்கள், அளவிற் பெரியதாகவுள்ள கழிவுப் பொருட்கள். சாம்பல், சேற்றுக் களிமண், கழிவு எண்ணெய், விலங்கு மற்றும் மனித மலம், கழிவு அமிலம், எரியூட்டிய பொருட்கள், விலங்குகளது உயிரற்ற உடல்கள் போன்ற முக்கியமற்ற எச்சங்கள் மற்றும் இவற்றுக்குச் சமமான பொருட்கள் என்பதையும் குறிக்கும்.

*29*. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாவாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*10-582*